Registered as a Newspaper In Sri Lanka விலை - ரூபா ஒன்று

# ஈழமுரசு

மலர் 2 18-6-1985 செவ்வாய்க்கிழமை (ஆனி 4 நம்மூரான் 28) முழக்கம் 133

## கிளிநொச்சியில் மூன்று வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மூன்றும் வாய்க்கால் என்னுமிடத்தில் உள்ள மூன்று வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. நேற்று முன்தினம் மாலை சீருடையில் சென்றவர்களால் கிளிநொச்சி மூன்றும் வாய்க்காலிலுள்ள ஒரு வீடு குண்டு வைத்து முற்றாகத் தகர்க்கப்பட்டது இதைத் தொடர்ந்து அருகில் உள்ள மற்றுமிரு வீடுகளும் உடைந்து பலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டன. தீவிரவாதிகள் இவ்வீடுகளை பயன்படுத்தியதாக சந்தேகம் கொண்டதன் பேரிலேயே சீருடையினர் இவ்வீடுகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தி குண்டு வைத்துத் தகர்த்ததாகக் கூறப்படுகின்றது.

## இலங்கை தமிழர்கள் தீவிரமாகச் செயற்பட நிர்ப்பந்திக்கப்படுவதாக 'அமிர்' விளக்கம்

இலங்கையில் வாழும் தமிழர்கள் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பவில்லை; ஆனால் அவர்கள் அதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் நேற்று இதனைத் தெரிவித்த அவர், இதற்கான காரணத்தையும் அங்கு விபரித்தார்.

இலங்கையில் பாதுகாப்புப் படையினர் தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு மேற்கொண்டுவரும் அக்கிரமங்கள், அட்டூழியங்கள் தினசரி அதிகரித்து வருவதாலேயே, இங்குள்ள தமிழர்கள் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர் என்று அவர் கூறினார்.

இலங்கையில் தமிழர்கள் கொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்கு தாமதமின்றி சரியான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி பாரதமத்திய அரசைத் தாம் வேண்டியுள்ளதாகவும் திரு அமிர்தலிங்கம் இங்கு குறிப்பிட்டார்.

★ இனப்பிரச்சினைத் தீர்வு நடவடிக்கையில் புதிய திருப்பம்:

# இந்தியாவின் உயர் பிரமுகரை இலங்கைக்கு அழைக்க முயற்சி!

## அரசாங்கத்தின் அதி முக்கிய முடிவுகள் 24 மணி நேரத்துள் அறிவிக்கப்படலாம்!

(இது ஒரு பிரத்தியேக செய்தி)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வின் மற்றொரு முயற்சியாக, இந்தியாவின் மிகவும் உயர்மட்ட அரசியல் பிரமுகர் ஒருவரை வெகு விரைவில் இங்கு வரவழைப்பதற்கான தீவிரநடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் முழு முயற்சியுடன் ஈடுபட்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. தற்போது வெளிநாட்டிலிருக்கும் இப்பிரமுகர் இன்று பாரதம் திரும்பியதும் இது தொடர்பான முடிவுகள் வெளிவரக்கூடுமெனவும் தெரிகின்றது.

இலங்கை ஜனாதிபதி புதுடில்லி சென்று நடத்திய உச்சி மாநாட்டின் தொடர்ச்சியாக, இந்திய உயர் பிரமுகரை இங்கு அழைக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட பிரமுகர் அழைப்பை ஏற்பாராளுல் இவ்வார இறுதிக்குள் ஒருவார விஜயத்தை யாவது மேற்கொண்டு அவர் இங்கு வருகை தரலாமெனத் தெரியவந்துள்ளது.

இதற்கிடையே இரு பகுதி 'பேரர் நிறுத்த' அறிவிப்பு எந்த வேளையிலும் வெளிவரக்

—4-ஆம் பக்கம் பார்க்க

## 18 பேர் மட்டும் மரணமாம்!

மன்னாரில் தீவிரவாதிகளின் முகாம் மீது பாதுகாப்பு படையினர் கடந்த சனிக்கிழமை

— 4-ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் விடுதலை பாதுகாப்பு பேரணி கலைக்கப்பட்டது!

கடந்த சில காலமாக இயங்கி வந்த தமிழர் விடுதலைப் பாதுகாப்பு பேரணிஎன்ற அமைப்பு இன்று முதல் கலைக்கப்பட்டு விடுவதாக அதன் அரசியல் குழுவினால் விடுக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சிறிய இயக்கங்களை கலைத்து தமிழ் ஈழப் போராட்டத்துக்கு உரமூட்டுவோம்' என்ற தலைப்பில் இது தொடர்பான பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற சிறிய அமைப்புகளால் விடுதலையை வென்றெடுக்க முடியாதென்பதையும், தமிழ்பேசும் மக்களுக்கு புனிதமான இயக்கங்களின் மீது வெறுப்புணர்ச்சியை உண்டாக்கிவிடுமென்பதையும் உணர்ந்து கொண்டதாலேயே பேரணியைக் கலைக்கும் முடிவு எடுக்கப்பட்டதெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகர சபையின் அத்தியாவசிய சேவையிலிருந்த

## மேலும் 4 ட்ராக்டர்கள் கடத்தப்பட்டன; நீர், மின்சார, சுகாதார சேவை பாதிப்பு!

### ஆபத்தான நிலையை விளக்கி ஆணையாளர் அறிக்கை

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான நான்கு ட்ராக்டர்கள் நேற்று முன்தினம் இரவு சபையின் நல்லூர் இந்து வீதி அலுவலகத்திற்குப் பின்புறமாக இருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ளன. இதனுடன் சேர்த்து தற்போது ஏழு ட்ராக்டர்கள் கடத்திச் செல்லப்பட்டுத் திருப்பிக் கொடுக்கப்படாமல் உள்ளன.

இக்கடத்தலினால் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய தீய விளைவுகளை உணர்ந்து அவற்றைத் திரும்ப ஒப்படைக்க சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு சகல இயக்கங்களையும் மாநகரசபை ஆணையாளர்

-4-ஆம் பக்கம் பார்க்க

லொறி ராணுவ முகாமில்!

## கைதடி சூட்டுச் சம்பவத்தில் சாரதி, கிளீனர் படுகாயம்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற லொறி ஒன்றின் மீது நேற்று அதிகாலை கைதடிப் பாலத்திற்கண்மையில் மேற்கொள்ளப்பட்ட துப்

—4-ஆம் பக்கம் பார்க்க

## அரிசி மூடைகளை மீட்டதற்கு 'ரெலோ' உரிமை கோரல்

கடந்த வாரம் குருநகரிலுள்ள உணவுக் களஞ்சியத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட அரிசிமூடைகளில் பல நூற்றுக்கணக்கானவற்றை தங்கள் இயக்கம் மீட்டெடுத்து யாழ்ப்பாணம் செயலக அதி

-4-ஆம் பக்கம் பார்க்க

## திருமலை அகதிகளுக்கு உதவுமாறு தமிழர் கூட்டணி வேண்டுகோள்!

அண்மையில் நடைபெற்ற அடுத்தடுத்த தாக்குதல்களால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் திருமலை மாவட்ட அகதிகளுக்கு உதவும்பொருட்டு 'தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்', திருமலை இந்து வாலிபர் சங்கம் ஆகியவற்றிடம் அன்பளிப்புகளையும், நன்கொடையையும் வழங்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் நிர்வாகச் செயலாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருமலையின் தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் அயல் மாவட்டத்திலுள்ள கிராமங்களிலும், காடுகளிலும் அடைக்கலம் புகுந்துள்ளதாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பல்வேறு கஷ்டத்தின் மத்தியில் வாழ்க்கை நடத்தும் இவ் அகதிகளுக்கு பொதுநிறுவனங்

—4-ஆம் பக்கம் பார்க்க

## ஆட்சேப ஊர்வலம்

(நல்லூர்)

ஆனைக்கோட்டைப் பகுதியில் வீடுகளுக்குப் போகும்

-4-ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் வங்கி நகைகள் கொழும்பில் விநியோகமா?

யாழ்ப்பாணம் மக்கள் வங்கியில் அடகுவைக்கப்பட்ட நகைகளை கொழும்பில் வைத்து வழங்குவதற்கு மக்கள் வங்கி எடுத்துள்ள நடவடிக்கைகளை யாழ் பிரஜைகள் குழு ஆட்சேபித்துள்ளது.

மக்கள் வங்கி கேட்டால் நகைகளை கொண்டுவந்து, யாழ்ப்பாணத்தில் வைத்து விநியோகம் செய்வதற்கு ராணுவ பாதுகாப்பு வழங்கப்படுமென்று பிரிகேடியர் வணசிங்கா உத்தரவாதமளித்ததை பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் நினைவுபடுத்தியுள்

—4-ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

### கல்விப் பணிப்பாளர் பேச்சு: யாழ். மாவட்டத்தில்

# வருடாவருடம் இருபதாயிரம் மாணவர்கள் 5-ம் வகுப்புடன் கல்விக்கு முற்றுப்புள்ளி

(புங்குடுதீவு)

"கல்வித்துறையில் முன்னேறிய மாவட்டங்களில் ஒன்றெனக்கருதப்படும் நமது யாழ் மாவட்டப் பாடசாலைகளில் ஆண்டு தோறும் 20 ஆயிரம் மாணவர்கள் ஐந்தாம் வகுப்புடன் தங்கள் பாடசாலைக் கல்விக்குமுற்றுப்புள்ளிவைத்து விட்டு வெளியேறிவிடுகிறார்கள். இது மிகவும் கவலைக்குரியது இந்த இடை விலகலைக் குறைக்கும் பொருட்டே தற்போது கல்வியமைச்சு தொடக்கநிலைப் பாடசாலைகளில் (ஆரம்ப பாடசாலைகள்) எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிற்றுதற்கு அனுமதி வழங்க முன் வந்துள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள 255 ஆரம்ப பாடசாலைகளினதும் தரம் இதன் மூலம் மேலும் உயர்வுறும்."

இவ்வாறு யாழ்- கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம் பிள்ளை வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தீவுப்பகுதிப் பாடசாலைகளைக் கல்வி வலயங்களாகப் பிரிப்பது தொடர்பாக ஆராயும் பொருட்டு நடைபெற்ற இக் கூட்டத்திற்கு வேலணை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொன். கணேசன் தலைமை வகித்தார். புங்குடுதீவு, வேலணை கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் செயலாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்திற் கலந்து கொண்டனர்.

திரு. சிமியாம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

அடுத்த ஆண்டு முதல் கல்வி வலயங்கள் செயற்படவுள்ளன. வட்டாரக் கல்வி அதிகாரி என்ற முறை நீக்கப்படவுள்ளது. இப்புதிய அமைப்பின் கீழ் தற்போதுள்ள பாடசாலைகளின் தரம் எதுவும் குறைக்கப்படமாட்டாது. தற்போது 5ம் வகுப்புடன் மட்டும் இயங்கும் 255 பாடசாலைகள் காலகதியில் எட்டாம் வகுப்பு வரை இயங்க முடியும். நமது மாவட்டத்தின் கல்வித் தரம் இதனால் உயர்வுறுமே தவிர குறையாது. இப்பாடசாலைகளின் அபிவிருத்திக்கு மூன்று கோடி ரூபா தேவைப்படும். 3 ஆண்டுகளில் படிப்படியாக இதனைச் சாதிக்க முடியும்.

கல்லூரி நிலைப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்தவும். சகல மாணவர்களும் கல்வியில் சம வாய்ப்பினைப் பெறவும் வழி செய்யப்படும்" என்றார்.

கல்வியதிகாரி திரு: க. கந்தசாமி பேசுகையில் புதிய கல்வி வலயங்கள் உருவானதும் பாடசாலைகளின் முகாமைப்பிலும், செயற்பாடுகளிலும் புதியதோர் மறுமலர்ச்சியைக் காணமுடியுமென்றார்.

புங்குடுதீவு வட்டாரக்கல்வியதிகாரி திரு. க. குகதாசன் உட்பட மற்றும் பலரும் கருத்துரை வழங்கினர். ஈற்றில் திரு. பொ. நடராசா நன்றி கூறினார்.


## வரி விளம்பரம்

### வாங்கவும் விற்கவும்

உங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கவும் தேவையில்லாத பொருட்களை விற்கவும் உடனே வாருங்கள் அல்லது எழுதுங்கள். ஏலவிற்பனை நிலையம், கோப்பாய்.

### தவறிவிட்டது

எனது அடையாள அட்டை யாழ்ப்பாணம் இன்னக்கடையில் தவறி விட்டது. கண்டெடுப்போர் தயவு செய்து V. K. மயில்வாகனம் 63, முருகன் கடே, புத்துவெட்டுவான், கிளிநொச்சி என்ற விலாசத்திற்கு அல்லது ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### தவறிவிட்டது

சென்ற ஞாயிற்றுக்கிழமை (9-6-85) கொழும்புக்குப் பிரயாணம் செய்கையில் கோப்பாய் சந்திக்கும் ஆனையிறவுக்கும் இடையில் எனது ரவலிங் பாக் தவறிவிட்டது. இதற்குள் முக்கிய திருமண வைபவத்தின் புகைப்படச் சுருள் இரண்டு இருந்தது. கண்டெடுத்தோர் கருணை கூர்ந்து நேரிலோ அல்லது வேறு தபர் மூலமோ எனது பொருட்களை (முக்கியமாகப் படச் சுருளைத்) தந்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமான முறையில் கருதப்படுவார். தொடர்பு: பிலிப்ஸ் றவல்ஸ் 3-ம் கட்டை கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

பருத்தித்துறை வல்லிபுரக் கோவில் றோட்டில் கோவிலுக்கு அருகாமையில் 15 ஏக்கர் வயல், பனங்காணி (வீடு கட்டக்கூடியது) விற்பனைக்குண்டு. சு. திருச்செல்வம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


# மக்கள் சேவையை மதித்து சுவரொட்டியில் விளக்கம்

(கிளிநொச்சி)

மக்களுக்கான சேவையை மதிப்போம் என்ற தலைப்பிலான சுவரொட்டிகள் கிளிநொச்சிப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக இப்பகுதியில் சில மதகுருமாரின் வாகனங்களின் கடத்தலையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அதில் பாதிரியாரின் வாகனம் அவரிடம்உள்ள பொழுது மக்களுக்கு பல சேவைகள் செய்தது. இப் பாரபட்சமற்ற பாதிரியாரின் சேவைக்கு மதிப்பளித்து வாகனத்தை உடனடியாக அவரிடம் ஒப்படையுங்கள். மக்களுக்காக சேவை செய்பவரின் மனதை புண்படுத்தாமல் ஆதரவளியுங்கள். மனிதாபிமானமற்ற செயலில் இருந்து மனதை மாற்றிக் கொள்ளுங்கள் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

இதேவேளை பரந்தன் பங்குக் குரு வண. பிதா ஓம்லோ அடிகளின் வாகனத்தை எடுத்துச் சென்றதற்கு ஆட்சேபம் தெரிவித்து பரந்தன் பங்கு மக்களால் நேற்று முன்தினம் நடத்தப்பட இருந்த உண்ணாவிரதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ராஜராஜ சோழன் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவநெறிக் கழகத்தின் ஆதரவில் ராஜராஜ சோழன் ஆயிரமாவது வருடாந்தவிழா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 25ம் திகதி பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பலரினது சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

## சைவ சித்தாந்த வகுப்புகள்

(காரைநகர்)

சைவசமய வளர்ச்சியின் பொருட்டும் ஆத்மீக வளர்ச்சியின் பொருட்டுமாக காரைநகர் சைவமகா சபையார் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 8 மணிக்கு சைவ சித்தாந்த வகுப்புகளை சைவமகாசபை மண்டபத்தில் நடாத்தி வருகின்றனர்.

இலங்கை மெய்கண்டார் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகளால் நடாத்தப்படும் இவ்வகுப்புகளில் மன அமைதி விரும்புவோர் வந்து கேட்டுப் பயனடையலாம். இவன் கோவிலடி சிவாச்சிரமத்திலும் இவ் வகுப்பு வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் நண்பகல் நடைபெறுகிறது.

## உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு ஏழாலை புங்கடி சுவர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வர சுவாமி தேவஸ்தான மகோற்சவம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

24ம் திகதி தேர்த்திருவிழாவும், 25ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.


## தயவான வேண்டுகோள்

30-5-85 அன்று பிற்பகல் 1 மணி அளவில் திருநெல்வேலி கிழக்கு கெனடி வீதியில் இருக்கும் எனது வீட்டிலிருந்து 88 ஸ்ரீ 4517 பச்சை நிற Honda C 70 மோட்டார் சைக்கிள் இனம் தெரியாத இருவரினால் கடத்திச் செல்லப்பட்டு விட்டது. கடத்தியவர்கள் தயவு செய்து மேலும் தாமதமின்றி வாகனத்தைத் திருப்பி ஒப்படைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனைய பொறுப்புள்ள நலன்விரும்பிகளும் இவ்வேண்டுகோளை பரிசீலனை செய்து எனது வாகனத்தை திருப்பி ஒப்படைக்க உதவி செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வாகன உரிமையாளர்





✻ அரியாலையைச் சேர்ந்த இராசையா இராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வன் பிரசாத் தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

✻ அரியாலை மலர் மகள் வீதியைச் சேர்ந்த யோகராசா புவனேஸ்வரி தம்பதிகளின் மகள் வெயோலசை இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கல்வியங்காடு பாலசுந்தரம் ரஞ்சி தம்பதிகளின் மகள் சஜிதா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கரவெட்டி மேற்கு யேசுதாசன் மேரிகிறேஸ் கனகமணி தம்பதிகளின் மகன் அன்ரன் ரூபேட் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ புங்கங்குளம் றோட் சண்முகராசா ராணி தம்பதிகளின் மகன் பாஸ்கரன் இன்று தனது பன்னிரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கோப்பாய் பாஸ்கரராஜன் ஈஸ்வரி தம்பதிகளின் மகன் பிரசாத் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ பருத்தித்துறை ஜோதீஸ்வரன் செல்வநாயகி தம்பதிகளின் மகன் ஸ்ரீதரன் இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## நயினை அம்பாள்

கத்தும் திரைக்கடல்
நடு அமர்ந்து
நித்தம் அடியவர்
வினை அறுத்து
விந்தைகள் புரிந்திடும்
விசாலாட்சி — எம்
சிந்தைகள் எல்லாம்
உன் ஆட்சி
இராவணன் பெயர்த்த
மலைகளாக
நிம்மதி பெயர்ந்த
மனங்களோடு
நிரந்தரமான
உறவைத்தேடி
நித்தமும் உன்பதம்
தொழுதோம் நாடி
அவலங்கள் நீங்க
அருள்வாய் தாயே
ஆயே நயினை
நாகபூஷணியே.

★ நயினை குலம்

(இன்று நயினாதீவு அம்பாள் ஆலய கொடியேற்றம்)

# சாவகச்சேரி வட்டாரம் ஆறு கல்வி வலயமாகும்

(மிருசுவில்)

சாவகச்சேரி கல்வி வட்டாரம் ஆறு கல்வி வலயங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படவிருக்கின்றது.

அண்மையில் சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டமொன்றில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி சாவகச்சேரி, கைதடி, மட்டுவில், வரணி, கொடிகாமம், உசன் ஆகிய ஆறு புதிய கல்வி வலயங்கள் உருவாக்கப்படும்.

யாழ். கல்வி திணைக்களத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகளான திருவாளர்கள் சி. சோமசுந்தரம், வ. கந்தசாமி சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ம. தங்கராசா ஆகியோருடன் சாவகச்சேரி கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த 63 பாடசாலைகளினதும் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.


## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

யாழ். ப. நோ. கூ. சங்கம்

### ஏல விற்பனை

கடைகளுக்குத் தேவையான கண்ணாடி அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், ஆகியவை 23-6-85 ஞாயிற்றுக் கிழமை காலை 10 00 மணிக்கு பிரதான வீதியிலுள்ள ரவுண் சொப் கிளையில் ஏலத்தில் விற்கப்படும் விபரங்கள் தேவையானோர் யா. ப. நோ. கூ. சங்கம், 127, காங்கேசன்துறை வீதி, அல்லது தொலைபேசி இலக்கம் 22350 உடன் தொடர்பு கொள்ளவும்.

பதில் பொதுமுகாமையாளர்.

127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம், 11-6-85.

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

யாழ். ப. நோ. கூ. சங்க வைத்தியசாலை

### தளபாடங்கள், உபகரணங்கள்

## மாபெரும் ஏல விற்பனை

எதிர்வரும் 22-6-85 சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு இல 17, கண்டி வீதியிலுள்ள கூட்டுறவு வைத்தியசாலையில் மேற்படி ஏல விற்பனை நடைபெறும். விபரங்கள் தேவையானோர் யாழ் ப. நோ. கூ. சங்கம், 127, காங்கேசன்துறை வீதி, அல்லது 22350 இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

பதில் பொதுமுகாமையாளர்.

127: கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம், 11-6 85

ஈழமுரசு



### உதய சிந்தனை

எவன் பாவத்தைச் சம்பாதிக்கின்றானோ, அவன் நிச்சயமாகத் தனக்குக் கேடு விளைவிக்க அதனைச் சம்பாதிக்கின்றான். -குர் ஆன்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

18-6-1985 செவ்வாய்க்கிழமை (குரோதன ஆனி 4)

# எமது 'இளைய சமுதாயம்' இதற்கு என்ன செய்யும்?

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திலுள்ள பென்ஷன் பிரிவில் இடம் பெற்ற தீவைப்புச் சம்பவம் பற்றிக் கிடைத்து வரும் தகவல்கள் அதிர்ச்சியையும், அதேவேளை கவலையையும் தருவதாகவுள்ளன.

ஓய்வூதியக்காரர்களின் முக்கியமான தஸ்தாவேஜுகள், ஆவணங்களைக் கொண்ட பதிவேடுகளின் களஞ்சிய அறையே தீமூட்டப்பட்ட பகுதியாகும்.

கறுப்புச் சட்டையுடன், சனிக்கிழமை இரவு செயலகத்துள் சென்றவர்கள், நேராக அந்தக் களஞ்சிய அறைக்குச் சென்று, ''தமது வேலையை'' மெத்தக் கவனமாகச் செய்ததால், ஆயிரக்கணக்கான பென்ஷன்காரர்கள், அவதியுறும் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதினேழாயிரத்திற்கும் சற்றுக் கூடுதலான ஓய்வூதியக்காரர்கள் இருக்கின்றனர்.

வயது முதிர்ந்த, ஆதரவளிப்பார் அற்ற, ஏழைப் பென்ஷன்காரர்கள் கடந்த சில மாதங்களாகத் தமது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு நடத்திவரும் போராட்டத்தைப் பல தடவைகள் நாம் செய்தியாக வெளியிட்டிருக்கின்றோம்.

குருநகருக்கும், துரையப்பா விளையாட்டரங்கிற்கும் மாறி மாறி மரதன் ஓட்டம் நடத்தி, கொளுத்தும் வெய்யிலிலும், கொட்டும் மழையிலும் நின்றால் மட்டுமே தங்கள் ஓய்வூதியத்தைப் பெற முடியுமென்பது, யாழ்ப்பாணத்தில் வாழும் பென்ஷன்காரர்களின் தலையெழுத்தாகும்.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் கடமைபுரியும் உயர் அதிகாரிகளினதும், சேவை மனம் படைத்த ஊழியர்களினதும் அயரா உழைப்பினாலும், விசுவாசமான நடத்தையாலுமே, இன்றைய நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட இவர்களால் தங்கள் ஓய்வூதியத்தைக் கிரமமாகப் பெறமுடிந்தது என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது, எமது கடமை எனக் கருதுகின்றோம்.

ஆனால், பென்ஷன் பிரிவின் ஒருசில ஊழியர்கள் நீண்டகாலமாக நடத்தி வந்ததாகக் கூறப்படும் லட்சக்கணக்கான ரூபா சம்பந்தப்பட்ட மோசடி சில மாதங்களுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே, பலரும் கண்களைத் திறந்தனர்.

இல்லாதவர்கள் பெயராலும், இறந்தவர்கள் பெயராலும் மாதாமாதம் பென்ஷன் வழங்கிவந்த சில ஊழியர்களின் ஊழல் நடவடிக்கைகள் தெரிய வந்ததால், உயர் அதிகாரிகள் உடனடியாகவே விசாரணைகளை ஆரம்பித்தனர்.

ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார்; மற்றொருவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்; மூன்றாவது ஊழியருக்கு எதிரான விசாரணை முடிவுபெறும் கட்டத்திலுள்ளது.

அதே வேளையில், ''கைவைக்க முடியாத'' நிலையில் காட்சியளித்த பென்ஷன் பிரிவைப் புனரமைக்கும் வேலைகளை அரசாங்க அதிபர் ஆரம்பித்தார்.

சில சிரேஷ்ட அதிகாரிகளின் தலைமையில் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. சிதறுண்டு கிடந்த சகல பென்ஷன்காரர்களின தஸ்தாவேஜுகளும் ஒழுங்கு படுத்தப்பட்டு தனியான ஒரு களஞ்சிய அறையில் வைக்கப்பட்டன.

அடுத்த மாதம் முதல் சகலரும் தமது பென்ஷனை எந்தக் குளறுபடியுமின்றி பெற முடியுமென்ற நிலை உருவாக்கப்பட்டு வந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது கவனிக்கப்படவேண்டியது.

இது ஒரு தீ விபத்தாகவோ, அல்லது தற்செயலாக நடைபெற்ற சம்பவமாகவோ இருக்க முடியாதென்பதை அரசாங்க அதிபர் விடுத்துள்ள அறிக்கை புரிய வைக்கின்றது.

நடைபெற்று வந்த ஊழல், மோசடி விசாரணைகளுக்குக் குந்தகத்தை விளைவிக்கவும், தொடர்ந்து விசாரணைகளை நடத்த முடியாத நிலையை உருவாக்கவுமே திட்டமிடப்பட்டு தீ வைப்பு நடைபெற்றுள்ளதென்ற சந்தேகம், ''வெறும் சந்தேகமாக'' இருக்க முடியாது.

எமது மூத்த பரம்பரையின் வாழ்க்கையுடன் விளையாட்டு நடத்தியிருக்கும் மோசடிக் கும்பலை கண்டும் காணாதது போல விடமுடியுமா?

சின்னஞ்சிறு களவுகள், கொள்ளைகளுக்காக உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வரும் எமது'' இளைய சமுதாயம்'' இதற்கு என்ன செய்யப்போகிறது?

இந்தத் தீய செயலைச் செய்த நாசகாரச் சக்திகள் சந்திக்குக் கொண்டுவரப்பட்டு, மக்கள் முன்னால் நிறுத்தப்படுவார்களா?

பொதுமக்கள் இதற்கான விடைகளை எதிர்பார்த்திருக்கின்றனர்!

---

★ அமெரிக்க விமானக் கடத்தல் விவகாரம்

# நெருக்கடி வலுவடைகிறது

# நிலையை இஸ்ரேல் பரிசீலனை!

(பெய்றூட்)

கடந்த வெள்ளிக்கிழமை ஷியா முஸ்லீம் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்ட அமெரிக்க விமானம் மூன்றாவது தடவையாகப் பெய்றூட்டில் தரையிறக்கப்பட்டதனையடுத்து நிலைமையில் பல மாற்றங்கள் உருவாகியுள்ளன. இவ்விமானத்திற்குள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள முப்பத்து இரண்டு அமெரிக்கர்களும் கூட்டாக அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனுக்கு வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளனர். கடத்தல்காரர்களுக்கு எதிராக எவ்வித இராணுவ நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என அவர்கள் இதில் கோரியுள்ளனர். வாரமுடிவில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஜனாதிபதி இந்நெருக்கடியையடுத்துத் தன் ஓய்வைச் சுருக்கிக்கொண்டு அலுவலகம் விரைந்தார். பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும் அல்லது அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டிவரும் என்று அவர் கடத்தல்காரர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

இதற்கிடையில் கடத்தல்காரர்களுடன் அதிகாரிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது இஸ்ரேல் அரசு ஜெரூஸலத்தில் நிலைமையைப் பரிசிலனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அமெரிக்க அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது கடத்தல்காரர்கள் எண்ணிக்கை என்ன என்பது தெரியாத போதிலும் பெய்றூட்டில் விமானம் தரையிறங்கியதும் ஆயுதம் தாங்கிய எண்மர் மேலும் முன்னவர்களுடன் சேர்ந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் முகாம்களில் உள்ள அரபுக் கைதிகள் விடுவிக்கப் படவேண்டும் என்பதே கடத்தல்காரர்கள் விதித்துள்ள நிபந்தனையாகும்.

இதுவரை தொண்ணூறு பயணிகள் விடுதலை செய்யப் பட்டுள்ளனர். மத்திய தரைக் கடலுக்கு மேல் மூன்று தடவைகள் பறந்த இவ்விமானம் அல்ஜீயஸில் இரு தடவைகள் தரையிறங்கியது. சமாதான முயற்சிகளில் வெளிநாட்டுத் தூதரகங்களின் உதவியும் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஆப்கான் குண்டு வெடிப்பு: 140 பேர் மடிந்தனர்

(லண்டன்)

வடக்கு ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் நூற்று நாற்பது பேர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

பெரும் கட்டடம் ஒன்றைக் கிளர்ச்சிக்காரர்கள் குண்டு வைத்துத் தகர்த்தனர் என்றும் இதனால் அக்கட்டடத்தின் இரண்டாம், மூன்றும் மாடிகள் சேதமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இடிபாடுகளுக்கிடையில் இருந்து சடலங்கள் மீட்கப்படுவதாகவும் இறந்தோரில் அநேகமானோர் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்ட கட்டடத்தைத் தம் விடுதியாகப் பாவித்து வந்தவர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்க ஒத்துழைப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் பதினொரு மாவட்டங்கள் தொழில் பேட்டைகளாகப் படவுள்ளன. இத்திட்டத்திற்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பு கிடைக்கவுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் இந்த வகையில் முதல் தொழில் பேட்டை அமையும் என்று நேற்றுத் தெரிவிக்கப் பட்டது.

## றீகனை மிகவும் கவர்ந்தது ராஜீவின் அன்புள்ளம்

(வாஷிங்டன்)

பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ்காந்தியின் வெளிப்படையான பேச்சும், அன்புள்ளமும் தன்னைப் பெரிதும் கவர்ந்ததாக அமெரிக்க ஜனாதிபதி திரு றொனல்ட் றீகன் கருத்து வெளியிட்டுள்ளதாக வாஷிங்டன் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் பாரத-அமெரிக்க உறவில் விரும்பத்தக்க மாற்றங்கள் பல பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியின் அமெரிக்க விஜயத்தையடுத்து உருவாகியுள்ளதாக அமெரிக்கத் துணை ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்திருக்கிறார்.

## பாக. அரசு மறுக்கிறது

(கராச்சி)

அணு ஆயுதத்திட்டம் தொடர்பாகப் பாரத பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி சுமத்திவரும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனப் பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

## லெபனானில் ஏககாலத்தில் பீரங்கி, றொக்கெட் தாக்குதல்

(பெய்றூட்)

லெபனானில் கிறிஸ்தவ, முஸ்லீம் படைகளுக்கிடையே மீண்டும் சண்டை வலுத்து வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சமீபத்திய சண்டையில் பதினாறு பேர் கொலைப்பட்டனர்; முப்பத்தாறு பேர் காயமடைந்தனர்.

கிறிஸ்தவரின் கிழக்குப் பகுதியிலும் முஸ்லீம்களின் மேற்குப் பகுதியிலும் சண்டை உக்கிரமடைந்து வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

சண்டையில் பீரங்கிகள், றொக்கெட்டுகள், இயந்திரத் துப்பாக்கிகள் என்பன பாவிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## காணாவுக்கு அன்பளிப்பு

(காணா)

பாரதம் பத்து லட்சம் ரூபா பெறுமதிமிக்க மருந்து வகைகளை காணாவுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது

பாரதத்தின் நன்கொடைக்கு காணாவின் சுகாதார மந்திரி திரு தனோர் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

## அமிதாப் மறுக்கிறார்

(புதுடில்லி)

தனது தொகுதியைக் கவனிக்காமல் சினிமாத்துறையில் தான் ஆர்வம் காட்டப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை திரு. அமிதாப்பச்சன் எம். பி மறுத்துள்ளார்.

அலகபாத் தொகுதியில் அவர் கடந்த டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில் மகோன்னத வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷ்: ஜனாதிபதி கோரிக்கை நிராகரிப்பு

(டாக்கா)

எதிர்க்கட்சியினருடன் ஆலோசனை நடத்துவது என்ற பங்களாதேஷ் ஜனாதிபதி லெப்டினன்ட் ஜெனரல் எர்ஷாத்தின் கோரிக்கையை இரு முக்கிய எதிர்க் கட்சிகள் நிராகரித்துள்ளன.

ஜனாதிபதிக்கு அமைதித் தீர்வில் உண்மையான நாட்டமில்லை, அவர் வெறுமனே காலத்தைக் கடத்தவே முயற்சிக்கிறார் என அவை குற்றஞ் சாட்டின.

## சந்திப்பு

(லண்டன்)

சீனப் பிரதம மந்திரி திரு. ஷியோ ஷியாங் தனது பிரிட்டிஷ் விஜயத்தின்போது எலிஸபெத் மகாராணியாரையும் அவரது சகோதரி மார்கிரெட்டையும் சந்தித்து உரையாடினார்.

## ஜெனீவாவில் ராஜீவ்

(ஜெனீவா)

பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி தனது வெளிநாட்டுப் பயணத்தின் இறுதிக் கட்டமாக ஜெனீவா வந்தடைந்தார். அவருக்கு மிக பலமான பாதுகாப்பு அளிக்கப்பட்டது, விமான நிலையத்தில் இருமருங்கிலும் இயந்திரத் துப்பாக்கிகளை ஏந்திய பொலீசாருடன் குண்டு துளைக்காத பொலிஸ் கார் ஒன்றும் அவரை ஏற்றிச் செல்ல நிறுத்தப்பட்டிருந்தது உலக அமைதி நடவடிக்கையின் மத்திய ஸ்தானமாக ஜெனீவா விளங்கி வந்துள்ளது என்றார் அவர்.

18 . 6 . 1985 செவ்வாய்க்கிழமை

# ஈழமுரசு

விமான டிக்கட்டுகளை மலிவாகப் பெறுவதற்கும்
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி ★ ஹொலன்ட்
மற்றும் நாடுகளுக்குச் செல்வதற்கான
பிரயாண ஒழுங்குகளைச் செய்வதற்கும்
யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்:
ரான்ஸ் யூரோ ரவல்ஸ்
தொடர்பு: S. K. மகேந்திரராஜா
இல 6, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23831

தமிழ் கிராமங்கள் தாக்குதலால்

# திருமலையில் 28 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

## 7 பாடசாலை அகதி முகாம்

திருமலை மாவட்டத்தில் உள்ள இருபத்தி எட்டுப் பாடசாலைகள் அங்கு சமீபத்தில் ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதாகவும், இதனால் அப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு தற்காலிக வேலை வழங்க வேண்டும் எனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் திரு. த. மகாசிவம் கல்வி அமைச்சின் செயலாளருடனும் திருமலை மாவட்ட கல்விப் பணிப்பாளருடனும் தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மூதூர்க் கிளை இந்நிலைமைகள் பற்றி ஆசிரியர் சங்கத்தின் செயலாளருடன் தொடர்புகொண்டு விடுத்த வேண்டுகோளையடுத்தே அவர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மூதூர்ப் பகுதியில் 16 பாடசாலைகள் உள்ள கிராமங்களின் மக்கள் முழுமையாக வெளியேறியுள்ளார்கள் எனவும், ஐந்து பாடசாலைகள் உள்ள கிராமங்களில் இருந்து மக்கள் பகுதியளவில் வெளியேறியுள்ளனர் எனவும், ஏழு பாடசாலைகள் அகதிகள் முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன எனவும் ஆசிரியர் சங்கத்தின் மூதூர்க் கிளை, சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவத்திற்கு அறிவித்துள்ளது.

## யாழ்தேவி நேரமாற்றம்

இன்று யாழ்தேவி கோட்டையிலிருந்து காலை 7.05க்கு புறப்பட்டு பகல் 12.05க்கு வவுனியா வரும்.

வவுனியாவிலிருந்து பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்டு, இரவு 7.10க்கு கோட்டையைச் சென்றடையும்.

## குண்டுவெடிப்பு புலிகளின் செயல் என்கிறார் லலித்

வடபகுதி ரயில் சேவையை சீர்குலைக்க தீவிரவாதிகள் முயற்சி செய்கின்றனர் என தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கவலை தெரிவித்துள்ளார்.

இவர்களது இந்த செயலினால் வடபகுதி மக்கள் மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்குகிறார்கள் என்றும், வடபகுதிக்கு உணவு, மருந்து எரிபொருள் மற்றும் அத்தியாவசிய தேவைகளை இந்த ரயில்பாதை சீர்குலைப்பினால் நடாத்த முடியாது இருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் இந்த செயலினால் அரசாங்கத்தை தீவிரவாதிகள் வஞ்சம் தீர்க்கிறார்கள் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை ஓமந்தையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## வெளிநாட்டு நிதி உதவிகள் பாதுகாப்புக்குப் பயன்பாடு

இலங்கைக்கு நட்புறவு நாடுகள் அளிக்கும் உதவிகளை தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக பாதுகாப்புப் படையினருக்குப் பாவிப்பதாக நோர்வேயில் வெளி தெரிவித்த குற்றச்சாட்டை நிதியமைச்சர் ரொனி டீ மெல் மறுத்துள்ளார்.

அவர் இலங்கை அரசு தமிழர்களைக் கொடுமைப்படுத்தவில்லை என்றும், வடக்கு கிழக்கு பகுதிகளில் தீவிரவாதிகளின் வன்செயல்களினால் அபிவிருத்தி வேலைகள் சீர்குலைந்து விட்டதாகவும், அப்பகுதிகளில் இவர்களின் வன்முறைகள் நிறுத்தப்பட்டதும் மீண்டும் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாகுமெனவும் தெரிவித்தார்.

## மார்பு எலும்பு முறிந்தது

கடந்த வெள்ளிக்கிழமை சியா லெபனன் முஸ்லிம் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்ட அமெரிக்க போயிங் விமானம் தற்போது பெய்ருட்டில் நிறுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து விடுவிக்கப்பட்ட பயணிகளில் ரூபேட் கீல் என்பவர் தம்மை கடத்தல்காரர் மிக மோசமாகத் தாக்கியதால் தமது மார்பு எலும்பு முறிந்துவிட்டதாக பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இந்தக் கடத்தல்காரர்கள் இஸ்ரேலில் காவலில் உள்ள லெபனன் தீவிரவாதிகளை விடுவிக்கும்படி கோரி இக்கடத்தலை நடாத்தியுள்ளனர்.

## வசமாகப் பிடிபட்டார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சிறு சிறு திருட்டுக்களைப் புரிந்து வந்த நபரொருவர் ஜெயந்தி நகரில் வைத்து இளைஞர்கள் சிலரிடம் பிடிபட்டார்.

இந்த நபர் ஜெயந்தி நகரில் இரவில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதைக் கண்ட பொதுமக்கள்சிலர் துரத்திப் பிடிக்கச் சென்றபோது ஒருவரை முகத்தில் கத்தியால் குத்தி பலத்த காயமேற்படுத்தி விட்டு தப்ப முயற்சிக்கையில் வசமாக பிடிபட்டார்.

### திருமலை அகதி....

-1-ஆம் பக்கத் தொடர்

களும், நல்மனம் படைத்தவர்களும் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்யவேண்டுமென தமிழர் கூட்டணி பொதுமக்களை வேண்டுவதாகவும் திரு: ஆலாலசுந்தரம் மேலும் தெரிவித்துள்ளார்.

### மக்கள் வங்கி...

... 1ஆம் பக்கத் தொடர்

வார்.

இதுதொடர்பாக அரசாங்க அதிபர் ஊடாக மக்கள் வங்கித் தலைவருக்கு திரு. பாலசுப்பிரமணியம் கடிதமொன்றை அனுப்பியுள்ளதுடன், தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

### ஆட்சேப ஊர்....

... 1ஆம் பக்கத் தொடர்

பாதையொன்றை சிலர் பலாத்காரமாகத் திறந்து வைத்ததை ஆட்சேபித்து சுலோகங்களைத் தாங்கிய குழுவினர் ஆனைக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையம் வரை ஊர்வலமாக வந்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர். இந்த ஊர்வலம் நேற்று மாலை நடைபெற்றது.

### அரிசி மூடைகளை....

-1-ஆம் பக்கத் தொடர்

காரிகள் ஊடாக, உணவுக் களஞ்சியப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்ததாக 'ரெலோ' விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள வேறொரு உணவுக் களஞ்சியத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட மிளகாய் மூடைகளில் ஒரு பகுதியையும் தாங்கள் மீட்டெடுத்து உணவுக் களஞ்சிய பொறுப்பாளரிடம் ஒப்படைத்ததாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பாதிக்கும் வகையில் எடுக்கப்படும் இந்நடவடிக்கைகளை தங்கள் இயக்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

### 18 பேர்...

-1-ஆம் பக்கத் தொடர்

நடத்திய தாக்குதலின் போது நூறு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக வெளியான செய்தி தவறு என்றும், பதினெட்டுத் தீவிரவாதிகளே மரணமானார்கள் எனவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### மேலும் 4 ட்ராக்டர்....

—1ஆம் பக்கத் தொடர்

வேண்டியுள்ளார்.

இதுசம்பந்தமாக அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

ஏற்கனவே எரிபொருள்தட்டுப்பாட்டினாலும் ஏனைய கட்டுப்பாடுகளினாலும் நகரின் சுகாதார சேவைகள் பாதிப்புறாமல் இருக்கும் வண்ணம் மிகக் கூடிய விலைக்கு எரிபொருளைப் பெற்றும் இம்மாநகராட்சி மன்றம் சேவையாற்றியது; ஆனால் தற்போது கடத்தப்பட்ட 4 வாகனங்களும் இல்லாதுபோனால் நகரின் சுகாதார சேவைகள் நிச்சயமாக ஸ்தம்பிதத்திற்கு வந்து விடும் என்பதையும் அதனால் இந்த நகரத்திற்கும் மக்களுக்கும் விபரிக்க முடியாத சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் என்பதையும் சம்பந்தப்பட்டவர்களுக்குத்தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

இந்தக் கடத்தல்கள் இயக்கங்களின் பெயர்களைச் சொல்லியே நடத்தப்பட்டிருப்பதனால் எல்லா இயக்கங்களையும் ஸ்தாபனங்களையும் எமது சேவைகளின் முக்கியத்துவத்தையும் அத்தியாவசிய தன்மையையும் சுதந்திரமாக இயங்கிவரும் தன்மையையும் கருத்திற்கெடுத்து செயற்படுமாறும், கடத்தப்பட்ட வாகனங்களை உடனடியாகத் திருப்பித் தருவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு சக இயக்கங்களை தூண்டுமாறும் வேண்டுகோள் விடுக்குமாறும் மிகப் பணிவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த ட்ராக்டர்கள் யாழ் மாநகர மக்களின் சொத்தாகும் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்திற்கெடுக்கும்படி வேண்டுகோள் விடுப்பதுடன், இவற்றினால் நீர் விநியோக மின்சார விநியோக சேவைகளும் பாதிப்படைந்து சீர்குலைந்து முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலையும், பலர் வேலைகளை இழக்கவேண்டிய நிலையும் உருவாகுமென்பதையும்சுட்டிக்காட்டவிரும்புகின்றோம் எனவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### இந்தியாவின்—

-1-ஆம் பக்கத் தொடர்

கூடுமெனவும், இது தொடர்பான பல முக்கிய அறிவித்தல்கள் அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்துள் வெளிவரக் கூடுமெனவும் தெரிய வந்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர் அத்துலத் முதலி இன்று காலை நடத்தும் பத்திரிகையாளர் மாநாடு முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

### கைதடி சூட்டுச்....

— 1-ஆம் பக்கத் தொடர்

பாக்கிப் பிரயோகத்தில் லொறியின் சாரதியும், கிளினரும் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெற்று பரல்களும், வேறு சில பொருட்களும் இந்த லொறியில் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் கைதடிப் பாலத்திற்கண்மையில் அதிகாலை 3 30 மணியளவில் லொறிமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால் லொறிச்சாரதியான வண்ணார்பண்ணையைச் சேர்ந்த முத்துராசு, (54); கிளினரான கைதடியைச் சேர்ந்த எம். நாதன் (24) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

லொறி, நாவற்குழி முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

19-6-85 முதல்
குதூகல ஆரம்பம்
'ஸ்ரீரங்கம் மினி'
புங்குடுதீவு வீதி
வேலணைத்துறையூர்
தினசரி
2-30, 6-30 காட்சிகள்

தரமான
தங்க - வைர நகைகளை
எண்ணம்போல்
தெரிவுசெய்ய
யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
(வின்ஸர் தியேட்டருக்கு முன்)
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## பிறந்த நாள் வாழ்த்து

### அர்ச்சனா மகேஸ்வரன்

மகேஸ்வரன் சிவபுஷ்பம் தம்பதிகளின் செல்வப் புதல்வி அர்ச்சனா தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். இவரை சகல செல்வங்களும் பெற்று வாழ்க என அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், சகோதர சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார் வாழ்த்துகிறார்கள்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைஸிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 18-6-85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது, தொலைபேசி: 23336.